1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பயிர் பாதுகாப்பு இன்சூரன்ஸ் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 1979–80 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் 1980-81 ஆம் ஆண்டு நெல் இரண்டாம் பயிருக்கும் கும்பகோணம் வட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

***வினா எண். 130— திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : திரு. பொ விஜயராகவன்: திரு. து. புருஷோத்தமன்:** மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த அடிப்படையில் வழங்கப்படும் ? :

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். விஜயபாலன் : இத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ? இத் திட்டத்திற்காக அரசுக்கு ஆகும் செலவுத் தொகை எவ்வளவு ?

(முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1979–80 இல் இத் திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் 6,965 பேர்கள். இன்சூரன்ஸ் செய்த நிலத்தினுடைய பரப் பளவு 12,566 ஏக்கர்; அதே போல் இன்சூரன்ஸ் செய்த தொகை 72,34,272 ரூபாய். 1980 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் 2,734 பேர்கள் இதன் மூலம் பயன்பெற்றிருக்கி கிறார்கள். அதிலே ஈட்டுத் தொகையாக 4,51,260 ரூபாய் கொடுக் கப்பட்டிருக்கிறது. 1979ஆம் ஆண்டைப் பொறுத்தவரைக்கும் 28,52,855 ரூபாய்க்கு பயிர் இன்ஷூரன்ஸ் செய்யப் பட்டிருக்கிறது.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டமானது தஞ்சை மாவட் டத்தைத்தவிர ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டமுண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர் களே, கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

---

* 339–341-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[1982 பிப்ரவரி 10

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, புரட்சித்தலைவரின் அரசு அறிவித்திருக்கிற இந்த புரட்சித் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத் திலாவது செயல்படுத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் அமல் நடத்தப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இராமநாத புரம் மாவட்டத்திலேயும் அது அமல் நடத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் பகுதியில் இது அமல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர் களே, சில பயிர்கள் இயற்கையின் சீற்றத்தினால் மட்டுமல்லா மல் புழு பூச்சியினால் நோய்கள் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கும் இந்த பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தத் திட்டமே அதற்குத் தான். வறட்சி, வெள்ளம், புயல், பூச்சி, நோய்கள் போன்றவற்றால் ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளால் பாதிக்கப் படுகின்ற பயிர்களுக்கு இந்தத் திட்டம் இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம் இரண்டாம் போகத்திற்கு மட்டும் கொடுக்கப்படுவதால் அமைச்சர் அவர்கள் அறி வித்தார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறுவையிலேதான் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப் படக்கூடிய நிலைமை, புயல், வெள்ளம், வறட்சி நோய் போன்றவற்றினால் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது அப்படிப் பாதிக்கப்படுகின்றவர்களின் நன்மை யைக் கருதி, குறுவைக்கு, முதல் போகத்திற்கு இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆரம்பத்திலே இரண் டாவது போகத்திற்கு என்று இருந்தபோதிலும் 80 ஆம் ஆண்டு பிரத்தியேக ஏற்பாட்டின் மூலமாக 6 வட்டங்களுக்கு அரசு முதல்போகத்திற்கும் அதை விரிவு படுத்தியிருக்கிறது.

மு